






▲ கோவை ஆர்.எஸ்.புரம் டி.பி.சாலையில் 'தி இந்து' நாளிதழ் சார்பில் நேற்று நடைபெற்ற 'கார் ஃபிரீ சண்டேஸ்' நிகழ்ச்சியில் சிறுவர்களுக்கு நடத்தப்படும் விநாடி – வினா போட்டியில் பங்கேற்றோர். (அடுத்த படம்) நாய்கள் வளர்ப்பு, தத்தெடுத்தல் குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்திய ஹியூமேன் அனிமல் சொசைட்டி தன்னார்வ அமைப்பினர். (கடைசி படம்) பிஎஸ்ஜி மருத்துவமனை உட்சுரப்பியல் துறை சார்பில், குழந்தைகளுக்கு ஏற்படக்கூடிய நீரிழிவு நோய் பற்றி விழிப்புணர்வு ஏற்படுத்த உள்ளங்கை பதிவைக் காட்டுவோர். படங்கள்: ஜெ.மனோகரன்

# சூழல் நலனுக்கு புதுப்பிக்கத்தக்க ஆற்றல், மன நலனுக்கு புத்தக வாசிப்பு

## ● விழிப்புணர்வு நிகழ்ச்சிகளால் வியக்க வைத்த 'தி இந்து' 'கார் ஃப்ரீ சண்டேஸ்'

■ **கோவை**

கோவை மாநகர மக்களிடையே சுற்றுச்சூழல் விழிப்புணர்வோடு, உடல்நலன் மீதான அக்கறையை உருவாக்கும் நோக்கில் ஞாயிற்றுக் கிழமைதோறும் 'தி இந்து' நாளிதழ் சார்பில் ஆர்.எஸ்.புரம், டி.பி.சாலையில் 'கார் ஃப்ரீ சண்டேஸ்' நடத்தப்பட்டு வருகிறது.

முக்கியச் சாலையாக இருந்தாலும், அதிகாலைப் பொழுதில் வாகனப் போக்குவரத்தை நிறுத்தி, சாலையை மக்களுக்கான பொழுதுபோக்குத் தலமாக மாற்றும் முயற்சியாக இந்த நிகழ்வு நடக்கிறது. இதனை மாநகராட்சியும், போக்குவரத்து காவல்துறையும் இணைந்து நடத்துகின்றன. நேற்று நடைபெற்ற 'கார் ஃப்ரீ சண்டேஸ்' நிகழ்ச்சியானது, சூழல் பாதுகாப்புக்கான நோக்கத்தையும், புத்தக வாசிப்பின் அவசியத்தையும் எடுத்துக் கூறும் வகையில் அமைந்தது கூடுதல் சிறப்பு.

அனைவருக்குமான பொதுவான உடற்பயிற்சிகளுடன் நேற்றைய 'கார் ஃப்ரீ சண்டேஸ்' காலை 6.30 மணிக்கு தொடங்கியது. அதன் தொடர்ச்சியாக கோவை கொடிசியாவில் நடக்கும் புத்தகக் கண்காட்சியை மையப்படுத்தி பிஎஸ்ஜி தொழில்நுட்பக் கல்லூரி மாணவ, மாணவியரின் நிகழ்ச்சிகள் நடைபெற்றன. கல்லூரியில் இயங்கும் புத்தக வாசிப்பாளர்கள் மன்றம், தமிழ்மன்றம் ஆகியவற்றின் சார்பில் பேராசிரியர் அரசு தலைமையில் 12 மாணவ, மாணவியர் குழு இந்த நிகழ்ச்சிகளை ஒருங்கிணைத்தது. கோபாலகிருஷ்ணன் என்ற மாணவர் கதைகளைக் கூறி, புத்தக வாசிப்பின் அவசியத்தை எடுத்துக் கூறினார். அதேபோல, புத்தகங்கள் குறித்த விநாடி வினா போட்டியும், ஓவியப் போட்டியும் நடைபெற்றது. இதில் வெற்றி பெற்ற சிறுவர், சிறுமியருக்கு கல்லூரி மாணவர்களே பரிசுகளை வழங்கி அசத்தினர்.

இதையடுத்து, பிஎஸ்ஜி மருத்துவமனையின் குழந்தைகளுக்கான உட்சுரப்பியல் துறை சார்பில், குழந்தைகளுக்கு ஏற்படக்கூடிய நீரிழிவு நோய் பற்றி விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது. அதைத் தொடர்ந்து, பார்வையாளர்கள் அனைவரும் தங்களது ஒத்துழைப்பை



▲ பொள்ளாச்சி மகாலிங்கம் பொறியியல் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரி வடிவமைத்துள்ள புதுப்பிக்கத்தக்க ஆற்றல் வாகனம்.

தெரிவிக்கும் விதமாக தங்கள் உள்ளங்கையை வண்ணங்களில் நனைத்து பதிவு செய்தனர்.

### ஆற்றல் வாகனம்

இந்த நிகழ்ச்சியைத் தொடர்ந்து பொள்ளாச்சி டாக்டர் மகாலிங்கம் பொறியியல் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரி வடிவமைத்துள்ள புதுப்பிக்கத்தக்க ஆற்றல் வாகனம் அறிமுகப்படுத்தப்பட்டது. புதுப்பிக்கத்தக்க ஆற்றலும், நிலையான சுற்றுச்சூழலும் என்ற தலைப்பில் வடிவமைக்கப்பட்டு,

தி இந்து
Present
CAR-FREE
SUNDAYS

தமிழகம் முழுவதும் விழிப்புணர்வை ஏற்படுத்தி வரும் இந்த வாகனம் நேற்று 'கார் ஃப்ரீ சண்டேஸ்'ன் முக்கிய அங்கமாக பங்களித்தது. சுற்றுச்சூழலை பாதுகாக்க, புதுப்பிக்கத்தக்க ஆற்றல்களை எவ்வாறெல்லாம் பயன்படுத்த முடியும் என பொதுமக்களுக்கு வல்லுநர்கள் விளக்கம் அளித்தனர்.

இந்த திட்டம் குறித்து அக்கல்லூரியின் புதிய கண்டுபிடிப்புகள் மற்றும் தொழில் முனைவோர் ஊக்குவிப்பு மைய முதன்மை ஒருங்கிணைப்பாளர் ஏ.சுவாமிநாதன் கூறும்போது, 'இயற்கையாக கிடைக்கும் ஆற்றல் வகைகளை நமக்கான தேவைகளுக்கு பயன்படுத்திக் கொள்வதை மக்களுக்கு தெரியப்படுத்த வேண்டிய அவசியம் இப்போது ஏற்பட்டுள்ளது. தேவையான ஆற்றலை சூழல் மாசுபடாதவாறு உற்பத்தி செய்ய வேண்டியது அவசியமாகியுள்ளது. அதற்கு சரியான உதாரணம் சூரிய ஒளியிலிருந்து மின்சாரம் தயாரிப்பது. ஒரே ஆற்றல் மூலத்தில் இருந்து பல வகையான பயன்பாடுகளைப் பெறுவது குறித்த கண்டுபிடிப்புகள் இந்த மொபைல் வாகனத்தில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. அதற்கு செயல்விளக்கமும் உண்டு. இதுபோல நாட்டின் இதர பகுதிகளில் இருந்தும் அரிய கண்டுபிடிப்புகளை இதில் சேர்த்துள்ளோம். கடந்த 20-ம் தேதி இதன் பயணம் தொடங்கியது. 2 ஆண்டுகளுக்கு தமிழகத்தின் அனைத்து பகுதிகளிலும் இதன் மூலம் விழிப்புணர்வு கொடுக்க திட்டமிட்டு பயணத்தை தொடங்கியுள்ளோம். அதன் ஒருபகுதியாக, 'கார் ஃப்ரீ சண்டேஸ்' நிகழ்ச்சி பலருக்கும் இந்த தகவலை வழங்க வாய்ப்பளித்தது' என்றார்.

இதனிடையே டெக்கத்லான் நிறுவனம் சார்பில், 'கார் ஃப்ரீ சண்டேஸ்' நிகழ்ச்சிக்கான விளையாட்டு உபகரணங்கள், சைக்கிள்கள் வழங்கப்பட்டன. அவற்றை பயன்படுத்தி சிறுவர்கள் பல்வேறு விளையாட்டுகளில் பங்கேற்றனர்.

நிகழ்ச்சியின் இறுதியாக, ஹியூமேன் அனிமல் சொசைட்டி தன்னார்வ அமைப்பின் சார்பில் நாய்கள் வளர்ப்பு, தத்தெடுத்தல் குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது. நாய்களுக்கான தடுப்பூசி, கருத்தடை உள்ளிட்ட சேவைகளின் அவசியம் குறித்தும், பெண் நாய்களை தத்தெடுப்பதன் அவசியம் குறித்தும் இவ்வமைப்பின் ஹீனா, அரவிந்த், விவேக் ஆகியோர் பேசினர். மேலும், பல்வேறு இனங்களைச் சேர்ந்த நாய்களை அவர்கள் எடுத்து வந்து, பார்வையாளர்களுக்கு விளக்கம் அளித்தனர். செல்லப்பிராணிகளை வளர்க்கும் மக்கள் ஏராளமானோர், அவர்களிடம் தங்களது சந்தேகங்களை கேட்டு பதில் பெற்றனர். மார்க் ஒன் ஈவண்ட்ஸ் நிறுவனம் நிகழ்ச்சியை ஒருங்கிணைத்தது. ரேடியோ சிட்டி எப்.எம் இணைந்து வழங்கியது.